**21.08.2025**
**MCOP.248/2023**
**ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது வயது, வருமானம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து எப்போது, எந்த இடத்தில் நடந்தது என்றால் 2020–ல் நாச்சிக்குளம், ஐஸ்வர்யா உணவகத்திற்கு எதிர்புறத்தில் நடந்தது. நானும், என் கணவரும் எந்த வண்டியில் சென்றோம் என்றால் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் சென்றோம். நாங்கள் சென்ற தார் ரோட்டில் எங்களுக்கு முன்னால் டாடா ஏசி வண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நாங்கள் எவ்வளவு துாரத்தில் இருந்து டாடா ஏசி வண்டியை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை பார்த்தோம் என்றால் சுமார் 15மீ துாரத்தில் வரும்போது பார்த்தோம். எனக்கு பின்னால் என்ன வாகனம் வந்தது என்றால் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டாரஸ் லாரி வந்தது. அந்த வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் சாலையில் நின்று கொண்டிருந்த டாடா ஏசி வண்டியை கடந்து செல்லும்போது என் கணவர் எனக்கு பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் சென்றதால் அந்த இரண்டு வண்டிகளுக்கு இடையில் அஜாக்கிரதையாக சென்றதால் தனக்கு தானே இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் பொறுப்பல்ல என்றும், என் கணவர் தான் பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் ஓட்டிச் சென்ற வாகனமானது மகளிர்

ஓட்டும் வண்டி என்பதால் அதில் நானும், எனது கணவரும் சென்றதால் நான் வண்டியை அசைத்து விட்டதால் இரண்டு வாகனங்களுக்கு இடையே விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட உடன் எந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம் என்றால் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மேல் சிகிச்சைக்காக பட்டுக்கோட்டையில் உள்ள நாடி மருத்துவமனைக்கு சென்றோம். இந்த விபத்தில் எனக்கும், எனது கணவருக்கும் காயம் ஏற்பட்டது. நாங்கள் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக விபத்து பதிவேடு நகல் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாக்கல் செய்யவில்லை. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அனைத்தும் நான் தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனைக்கு காரில் பயணம் செய்ததாக தாக்கல் செய்துள்ள ரசீதுகள் என்னால் தயார் செய்யப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் சாதாரண காயம் என்றும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் குணமடைந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் நஷ்ட ஈடு பெறுவதற்காக எனக்கு ஏற்பட்ட காயத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் அல்ல என்பதால் 2ம் எதிர்மனுதாரர்

எவ்வித நஷ்ட ஈடு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த மனு 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு சரியாக வாகனம் ஓட்ட தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வீட்டில் தான் இருந்து வருகிறேன் என்றும், வேலை ஏதும் கிடையாது என்று சொன்னால் நான் கோழிப்பண்ணை வைத்து நடத்தி வருகிறேன். நான் கோழிப்பண்ணை வைத்து நடத்தி வருவதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதையினால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டு கோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.